இருக்கின்ற TANTEA-ல்கூட இச்சட்டத்தை அமல்படுத்துவதில்லை. ஆகவே, Plantations Labour Act, 1951-ஐ அமல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு, கூடுதல் தொழிலாளர் நீதிமன்றத்தை உதகமண்டலத்தில் அமைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துறை ரீதியாக ஆய்வு செய்து, தேவைப்படும்பட்சத்தில், இதுகுறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 120, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**120**—

**சொந்தக் கட்டடம்**

***454—திரு. எஸ்.ஆர். இராஜா:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி, தாம்பரத்திலுள்ள வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2017 ஜூலை 3]

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு ஏதுவாக, தாம்பரம் வட்டம், பெருங்களத்தூர் கிராமத்தில் புல எண் 414-ல் மேய்ச்சல் வகைப்பாடு கொண்ட 2.39 ஏக்கர் நிலம் கண்டறியப்பட்டு, அதனை போக்குவரத்துத் துறைக்கு ஒதுக்கீடு செய்யக் கோரி காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியருக்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. மேற்படி நிலம் போக்குவரத்துத் துறைக்கு மாற்றம் செய்யப்பட்டவுடன், உரிய நிதி ஒப்பளிப்பு பெற்று, தாம்பரம் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா அவர்கள்.

**திரு. எஸ்.ஆர். இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நல்ல பதிலைச் சொல்லியிருக்கின்றார்கள். அந்த நடவடிக்கையை விரைவுபடுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். காரணம், இப்போதிருக்கின்ற அலுவலகத்தில் இடம் இல்லை. ஒரு நாளைக்கு 250 முதல் 300 பேர் வந்து செல்கிறார்கள். வீடுகள் இருக்கும் பகுதியாகவும், அதிகமான வாகனங்கள் செல்வதாலும் பயிற்சி செய்வதற்கும் வசதியில்லை. ஆகவே, இந்த நடவடிக்கையைத் துரிதப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கடந்த ஆட்சியில், திரு. கே.என். நேரு அவர்கள் போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்த காலத்தில், தாம்பரம் R.T.O. அலுவலகத்தை சோழிங்கநல்லூரில் ஒரு R.T.O. அலுவலகமும், தாம்பரத்தில் ஒரு R.T.O. அலுவலகமுமாக இரண்டாகப் பிரித்துக் கொடுத்தார். அதில், சோழிங்கநல்லூர் R.T.O. அலுவலகத்திற்கு 7 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்த 7 ஏக்கர் நிலத்தில், பணியாளர் ஏதாவது accident ஏற்படுத்திவிட்டால், அவரது பணியைத் தொடர பயிற்சி எடுப்பதற்கான இடம் அங்கு இருக்கிறது. அதுவும், இன்னமும் ஆரம்பிக்கப்படாத நிலையில் இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தாம்பரம் R.T.O. அலுவலகத்திற்கும், சோளிங்கநல்லூர் R.T.O. அலுவலகத்திற்கும் தேவையான பணிகளை உடனடியாக நிறைவேற்றித் தருவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா அவர்கள்.

**திரு. எஸ்.ஆர். இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துத் துறைக்குச் சொந்தமான தாம்பரம் depot, ஜி.எஸ்.டி. சாலையில் அமைந்துள்ளது. அந்த இடம் குறைந்தது 300 மீட்டர்தான் இருக்கும். அது அரசுக்குச் சொந்தமான இடம். அதற்கு சாலை போட்டுத் தர வேண்டுமென்று போக்குவரத்துத் துறை ஊழியர்கள் ஏற்கெனவே என்னிடத்தில் பலமுறை தெரிவித்திருக்கிறார்கள். அதற்கான நிதி ஆதாரம் இல்லை என்று சொன்னால், இந்தப் பகுதியை தாம்பரம் நகராட்சியிடம் ஒப்படைத்தால், அவர்கள் அதைப் பராமரிப்பதற்கு வாய்ப்பாக இருக்கும். அதற்குத் தேவையான நிதியுதவி வேண்டுமென்று சொன்னால், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து தருவதற்குத் தயாராக இருக்கிறேன். சாலை அமைத்துக் கொடுத்தால்தான் நகராட்சியால் அந்தப் பகுதியை எடுத்துக்கொள்ள முடியும். அதனால், அதற்கும் நாங்கள் தயாராக இருக்கிறோம். அதேபோல், கடந்த ஆண்டு குன்றத்தூரிலும் ஒரு பணிமனை கட்டப்பட்டு வேக வேகமாகத் தொடங்கப்பட்டது. அதற்கு சுற்றுச் சுவர் இல்லை. அக்கட்டடத்திற்கான தரைத் தளம் இல்லை, கட்டடமும் இல்லை. அதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக நிறைவேற்றித் தருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இரண்டு கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். ஒன்று சாலை அமைப்பது

*2017 ஜூலை 3]*

*சம்பந்தமாகவும், மற்றொன்று சுற்றுச் சுவர் அமைத்துத் தருவது சம்பந்தமாகவும் இரண்டு கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை ஆய்வு செய்து பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

*முற்பகல் 11-15*

## 2. தகவல் கோரல்

### தடை செய்யப்பட்ட பான் மற்றும் குட்கா போன்ற பொருள்கள் விற்பனை-விசாரணை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.*

***திரு. துரைமுருகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் தடை செய்யப்பட்டிருக்கிற குட்கா, பான் மசாலா போன்றவற்றை. . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *ஏற்கெனவே இதுபற்றி எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், நீங்களும் இந்த அவையில் எழுப்பி, நிறைய விவாதம் செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு மறுபடியும் அதையே பேசினால் எப்படி? அதையெல்லாம் அனுமதிக்க முடியாது. நான் அனுமதிக்கவில்லை. (குறுக்கீடுகள்) ஏற்கெனவே விவாதித்துவிட்டோம். (குறுக்கீடுகள்) நீங்கள் என்ன சொல்வதாக இருந்தாலும் சரி. அந்தப் பொருள் குறித்து ஏற்கெனவே விவாதம் இந்த அவையிலே நடந்து முடிந்துவிட்டது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் ஓர் அறிக்கை கொடுத்துவிட்டார். (குறுக்கீடுகள்) நீங்கள் திரும்பத் திரும்ப, அதையே (குறுக்கீடுகள்) அதிலே ஒன்றும் கேட்க முடியாது. (குறுக்கீடுகள்) இல்லை, அதிலே எதுவும் விஷயம் இல்லை. (குறுக்கீடுகள்) நான் ஏற்கெனவே அதை அனுமதித்துவிட்டேன். எதிர்க்கட்சித் தலைவரையும், உங்களையும் அனுமதித்து அது விவாதிக்கப்பட்டுவிட்டது. (குறுக்கீடுகள்)*